**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - ***641 003***

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: ***94890 56730***

தொலைபேசி: ***0422 - 6611302***
நிகரி: ***0422 - 2431821***
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: ***22.10.2025***
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தித்திப்பூட்டும் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர்ப் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சியியல் துறையில் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் வாலிபர்களை வெற்றியாளர்களாக்கும் நோக்கத்தில் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி தொடர்ந்து 26 நாட்கள் **27.10.2025** முதல் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் 25 நபர்களுக்கு வணிகரீதியில் தேனீ வளர்ப்புக் குறித்த அனைத்து தொழில்நுட்பங்களும் விளக்கமாக கற்றுத்தரப்படும். இதில் பங்கு பெற 18–35 வயதுக்குட்பட்டவர்களாய் இருத்தல் அவசியம். மேலும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவோர் 26 நாட்களும் தொடர்ந்து கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற விரும்புவோர் ஆதார் நகல் எடுத்து வர வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களைத் தொடர்பு கொண்டு 24.10.2025 தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புக்கு 9363529576; 9486893905: 9176690292: 9894383412.

**மக்கள் தொடர்பு அலுவலர்**